[1975 அக்டோபர் 23

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட இருக்கும் தொழிற்சாலையில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்? அது எந்த நிலையில் இப்போது இருக்கிறது? அது எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 500 பேருக்கு இதனுல் வேலை கிடைக்கலாம் என்ற விவரம் இருக்கிறது.

விவசாய அதிகாரிகள் குழு வருகை

**15 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் செப்டம்பர் மாத அளவில், பல நாட்டு விவசாய அதிகாரிகள் குழு தமிழகத்திற்கு வருகை தந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : ஓர் விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* 16. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a British Team had visited villages in Chingleput district on 7th October 1974 to study the Agricultural Production Programme ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : A statement ** is placed on the Table of the House.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பல நாட்டு விவசாய அதிகாரிகள் நம்முடைய விவசாயப் பகுதியைப் பார்த்துவிட்டு கருத்து ஏதேனும் தெரிவித்திருக்கிறர்களா? நம்முடைய விவசாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் வகையில் விருப்பம் தெரிவித்திருக்கிறர்களா?

---

* 225-226 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

** 226-228 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.